# <u>நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி</u>
# <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள்.29.09.2023

**நகர் மன்ற தலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**

---

<u>பொருள் எண் – 01</u>

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் தாலுக்கா நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள பொது ஒதுக்கீடு நகர் ஊரமைப்பு துறையினரால் வழங்கப்பட்ட நிபந்தனைகளின் படி ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா, சிறுவர் விளையாட்டு இடம், பொது திறவிடம் ஆகியவை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் 14262/2022/TP2, நாள்.20.06.2023–ல் குறிப்பிட்டுள்ளவாறு நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாறுதல் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 09.02.2023 முதற்கட்டமாக 27 எண்கள் முதலில் இணையதளத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக 29.08.2023–ல் 24 எண்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் Ao Size, தானப்பத்திரம் நகல் மற்றும் இணையவழி பதிவு கட்டணம் மூன்று பிரதிகள் ஆகியவை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஆன உத்தேச செலவினம் ரூ.25000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் உத்தேச செலவினம் வழங்கலாம்.
**ந.க.எண்.714/2022/எப்1**

**தீர்மானம் எண்.98**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 02</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நகர மன்ற தலைவர், ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் காணொளி கூட்டம் அறைக்கு தேவையான 4 எண்ணிக்கைAll in One PC, 4 எண்ணிக்கை All in One Printer மற்றும் 1 எண்ணிக்கை ஜெராக்ஸ் இயந்திரம் புதியதாககொள்முதல் செய்தல் புதியதாக வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1999/2023/இ1**

**தீர்மானம் எண்.99**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் – 03

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராசியானது பேரூராட்சியிலிருந்து அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021 மற்றும் அரசாணை (நிலை) எண்.122, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.12.2021–ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு மேலும் அரசாணை (நிலை) எண் 49 நாள். 15.04.2023–ல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் இருந்து வரும் நிலையில் அதன்படி சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சிக்கு உட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு இதுநாள் வரை சொத்து வரி விதிக்கப்படாமலும், வசூலிக்கப்படாமலும் இருந்த நிலையில், தற்பொழுது தமிழ்நாடு அரசு ஆணைக்கினங்க அணைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும், வசூலிக்கவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திரைப்படம் மற்றும் தொலைகாட்சி தொடர் (TV Serial ) போன்ற படபிடிப்பிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.10000/– மற்றும் பொருட்காட்சி, சர்க்கஸ் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.5000/– வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.100**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் – 04

அரசாணை எண்.122 நாள். 08.12.2021–ன் படி செங்கல்பட்டு மாவட்டம் பேரூராட்சியில் இருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபின் வருவாய் துறை வாயிலாக அனைத்து வரிகளும் வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், அரசாணை எண் 107 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 16.10.2017 ன் படி நகராட்சிகளுக்கு உட்பட்ட திரையரங்குகளில் கேளிக்கை வரி கீழ்கண்டவாறு வரன்முறைப்படுத்தி கணக்கீடு செய்து சம்மந்தப்பட்ட மாதத்தில் என்ன வகை திரைப்படம் திரையிடப்பட்டது என்ற விவரத்துடன் கேளிக்கை வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் | பழைய திரைப்படம் | புதிய திரைப்படம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் திரைப்படம் | 7% | 8% |
| 2. | இந்திய மொழி திரைப்படம் | 10% | 15% |
| 3. | ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி திரைப்படம் | 6% | 10% |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.101**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் – 05</u>**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியானது பேருராட்சியிலிருந்து அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 122, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.12.2021–ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு மேலும் அரசாணை (நிலை) எண் 49 நாள். 15.04.2023–ல் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் இருந்து வரும் நிலையில் பேருராட்சி காலத்தில் வசூல்செய்யப்பட்ட தொழில்வரியை எந்த மாறுதலும் இன்றி தற்பொழுதும் அதே விகிதத்தில் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.102**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் – 06</u>**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடையை கீழ்கண்ட நாளில் கீழ்கண்டவாறு ஏலம் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலம் கேட்ட நபருக்கு கடைக்கான உரிமத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.78 மற்றும் 92–ன் படி ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அரசாணை எண்.78 நாள்.25.05.2009 (3 ஆண்டுகள் குத்தகை) ஏலம் நாள்.24.08.2023**

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் (ம) ஏலத்தொகை(ஆண்டு) | அதிகபட்ச ஏலம் தொகை மற்றும் ஏலம் கேட்டவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | **APAMT கடைகள் 14** | திரு.முரளி – 8500/–<br>திரு.ஹரிஹரன் – 8400/–<br>திரு.பரத் – 8300/– | முரளி – 8500/– |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. உயர்ந்த பட்ச ஏலம் கேட்ட குத்தகை தாரர்களுக்கு அரசாணை எண்.78 நாள்.25.05.2009 மற்றும் அரசாணை எண்.92 நாள்.03.07.2007 –ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி மேற்கண்ட குத்தகையை 01.02.2023 முதல் ஒப்படைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உயர்ந்த பட்சம் ஏலம் கேட்ட குத்தகை தாரர்களின் டேவணி தொகை மற்றும் 12 மாதம் வாடகையை நகராட்சி கணக்கில் வைத்துக்கொண்டு ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படாத நபர்களுக்கு அவரவர்கள் செலுத்திய டேவணி தொகையை திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.727/2022/அ1**

**தீர்மானம் எண்.103**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் – 07

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.27968/2022/தி1 நாள்.28.08.2023–ல் நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களுக்கு நூல் கொள்முதல் செய்து அதற்கான செலவினத்தொகையினை சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிடம் ஒரு நூலகம் மற்றும் அறிவு சார் மையத்திற்கு ரூ.10,00,000/– வீதம் செலுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு பெறப்பட்டுள்ள நூல்களுக்கான செலவினத்தொகை ரூ.10,00,000/– நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படிதொகையினை உரிய அரசுக்கணக்கில் செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.854/2023/இ1**

**தீர்மானம் எண்.104**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் – 08

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.12091/2023/ எம் ஏ–2 நாள்.09.08.2023–ன் படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிலரங்கம் மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள், மண்டல இயக்குநர்கள், செயல்பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர்கள், செயல் அலுவலர்களுக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் 22.06.2023 அன்று நடைபெற்றது. இப்பயிலரங்கத்திற்கான செலவு தொகையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, அதன் படி முதல் நிலை நகராட்சிகளுக்கு ரூ.10000/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கான பங்களிப்புத் தொகை ரூ.10000/–ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் பதிவுசெய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படிதொகையினை உரிய அரசுக்கணக்கில் செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.854/2023/இ1**

**தீர்மானம் எண்.105**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

## பொருள் எண் – 09

இந்நகராட்சியில் 2023–2024–ம் நிதியாண்டிற்கு தேவைப்படும் எழுதுப்பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் பாரங்கள் சப்ளை செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.71 நாள்.07.08.2023–ன் படி ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்டுள்ள எழுத்துப்பொருட்களை அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான WEPCOMulti- Purpose Activity Society நெ.16ஏ, காங்கேயநல்லூரர் ரோடு, காந்தி நகர், வேலூர் – 632006 என்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.106**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

## பொருள் எண் – 10

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளுக்கு பொது நிதி 2023–24–ன் கீழ் பொறியியல் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.8 கன்னியப்பா நகர் பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 400000 |
| 2. | வார்டு எண்.29 கோவிந்தராஜபுரம் பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 250000 |
| 3. | வார்டு எண்.07 நந்தீஸ்வரர்நகர் பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 2475000 |
| 4. | வார்டு எண்.21 டிபன்ஸ்காலனி பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 1860000 |
| 5. | வார்டு எண்.27 கே.கே.நகர் முதல் பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 2200000 |
| 6. | வார்டு எண்.30 ஓம்சக்தி நகர் பிரதானசாலை தார்சாலை அமைத்தல் | 1800000 |
| 7. | வார்டு எண்.30 காமேஸ்வரி நகர், பரமேஸ்வரிநகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 2300000 |
| 8. | வார்டு எண்.15 கூடுவாஞ்சேரி குளம் மேற்கு பக்கம் தடுப்பு சுவர் அமைத்தல். | 2400000 |
| 9. | வார்டு எண்.30 சியோன் நகரில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரக்கூடம் கட்டிடத்தில் கூடுதல் பணிகள் செய்தல் (ஆழ்துளை கிணறு, வெல்ட் மெஷ், கழிப்பிடம் கட்டுதல்). | 1500000 |
| 10. | வார்டு எண்.21 கண்டிகை தாங்கலில் Outletவால்வு அமைத்தல். | 950000 |
| 11. | வார்டு எண்.4 காந்தி பூங்கா தெரு பிரதானசாலை தார்சாலை அமைத்தல். | 1725000 |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.107**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 11</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை 4D எண்.39, நாள்.14.09.2023–ன் படி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2023–24–ன் கீழ் பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அவற்றின் விவரம் கீழ்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.09 கே.ஜே.நகர் சர்வே எண். 1A ல் குழந்தைகள் விளையாடும் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கி வழங்குதல். | 28,00,000 |
| 2 | வார்டு எண்.07 கற்பகாம்பாள் நகர் சர்வே எண். 274/A28 ல் குழந்தைகள் விளையாடும் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கி வழங்குதல். | 28,00,000 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 1553/2023/இ1**

**தீர்மானம் எண்.108**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 12</u>

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022–23 ஆம் ஆண்டின் கீழ் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11919 /2022/இஎ–2, நாள்.07.09.2023–ன்படி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ரூ.1,04,26,481/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | புதியதாக ஒரு ஜே.சி.பி இயந்திரம் கொள்முதல் செய்தல். | 32,00,000 |
| 2 | மினிஜேசி.பி இயந்திரம் (skid steer loader) கொள்முதல் செய்தல். | 28,00,000 |
| 3 | சியோன் நகர் திடக்கழிவு மேலாண்மை 5TPD பொருள் மீட்பு வசதிகள் (material recovery facility) செய்யும் பணி. | 44,00,000 |
| | **மொத்தம்** | **1,04,00,000** |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.109**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் – 13**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் மற்றும் ஜி.எஸ்.டி சாலைகளில் மழைக்காலத்தின்போது முறிந்துவிழுகின்ற நிலையில் இருக்கும் மரங்களைஆட்களை கொண்டு அகற்ற ரூ.2.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்குஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.110**

மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் – 14**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அடர்ந்து வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றவும், கால்வாய் தூர்வாரி கழிவுமண் அகற்றவும் தனியார் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் பணியினை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்குஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.111**

மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் – 15**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட இரயில்வே தரைபாலம், தாழ்வான வார்டுகளில் சேகரமாகும் மழைநீர் தேங்கும் நிலையில் அதனை உடனுக்குடன் அகற்றவும், தனியார் மூலம் ஆயில் இஞ்சின் மோட்டார் பயன்படுத்திக்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளவும்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.112**

மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் – 16</u>**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கும், பெருமாட்டுநல்லூர் தலைமை நீரேற்றுநிலையம் ஆகிய இடங்களில் தனியார் ஜெனரேட்டர்கள் வாடகை மூலம் வாங்குவதற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.113**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் – 17</u>**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள ஏரிக்கரைகள் மற்றும் நகராட்சி குளங்கள் உடைப்பு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மணல் மூட்டைகள் கொண்டு சரிசெய்யவும், சிமெண்ட் பைப் பயன்படுத்தவும், இவைகளை தயார்நிலைப்படுத்தவும் ரூ.7.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.114**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் – 18</u>**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குண்டும் குழியும்மாக உள்ள சாலைகளில் (Wet Mix Macadam)வைத்து சமம்செய்ய ரூ.7.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.115**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>பொருள் எண் – 19</u>**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலையில் அமைந்துள்ள சமுதாய கூடத்தினை புதுப்பித்து பராமரிப்பு பணிகள் செய்ய ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டை பார்வையிட்டு அங்கீகரிக்கவும், நகராட்சி

பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.116**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 20</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட கண்டிகை தங்கல்மற்றும் நந்தீஸ்வரர் தங்கலில்வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆகாயதாமரைகள் அகற்றி தூர்வாரி ஆழப்படுத்திடவும், கரைகளை பலப்படுத்திடவும் ரூ.9.50 இலட்சத்திற்குமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டை பார்வையிட்டு அங்கீகரிக்கவும், நகராட்சி பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.117**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 21</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள சாலை நீளம், குடிநீர் பைப்லைன் நீளம், தெருவிளக்குகளின் எண்ணிக்கை, வடிகால்வாய்கள் நீளம் கணக்கிடும் பணியினை ஜியோ கிராபிக் இன்பர்மேஷன் சிஸ்டம் (Geo Graphic Information System) என்ற நிறுவனத்தின் மூலம் பொது நிதி 2023–24–ன் கீழ் பணிகளை மேற்கொள்ளவும் ரூ. 9.00/– இலட்சத்திற்கு தோராய மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.118**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 22</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான சாலைகளிலும், தெருக்களிலும் பொதுமக்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் சாலை விபத்துக்கள் ஏற்படுத்தும் விதமாகவும் சுற்றி திரியும் மாடுகளைப் பிடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது, இது குறித்து பொதுமக்களிடமிருந்தும், நகரமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது இந்நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறையாக உள்ளதாலும் மாடுகளைப் பிடிக்க போதிய பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் பயிற்சி பெற்ற பணியாளர்கள்கொண்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ஒரு மாடு பிடிக்க ஆகும் செலவினத்திற்கு விலைப்புள்ளி பெற்று

நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கும் நகர்மன்ற தீர்மான எண்:84 நாள்:07.08.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதின்படி.08.08.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களில் இருந்து விலை புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாடு பிடிப்பதற்கு ஆகும் தொகை |
|---|---|---|
| 1 | கௌராக் ஷா கமாண்டோ போர்ஸ் பாரத் | ரூ.1200 |
| 2 | நித்யா விஷ்ணு எண்டர்பிரைசஸ் | ரூ.1300 |
| 3 | ஏ.ஏ.ஆ. எண்டர்பிரைசஸ் | ரூ.1500 |

மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் வ.எண் 1ல் உள்ள நிறுவனமான திருவாளர். கௌராக் ஷா கமாண்டோ போர்ஸ் பாரத் என்ற நிறுவனத்திடமிருந்து குறைந்த விலைப்புள்ளி வரப்பெற்றது. எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை நகர் மன்றத்தின் பின்னேற்பிற்காக பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.119**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் – 23**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பதற்கு 2023–2024 ஆம் ஆண்டில் DBC பணியாளர்களை கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யப்பட்ட விவரப்படி 17954 குடியிருப்புகள் உள்ளன. இதற்கு Plan – 300 திட்டத்தின்படி 60 பணியாளர்கள் தேவை.

இந்நகராட்சியில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் மேற்படி, பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு மூலம் ( Out Sourcing ) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் DBC- மஸ்தூர் பணியாளர்களுக்கான மாவட்ட ஆட்சியரின் ஊதிய அளவு கோலின்படி ஒரு நபருக்கு ரூ.424/– வீதம் இதர செலவினங்களுடன் சேர்த்து ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.30 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2043/2023/எச்1

**தீர்மானம் எண்.120**

**<u>பொருள் எண் – 24</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் சீருடை பணியாளர்களுக்கு 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான சீருடை மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியது உள்ளது. எனவே, மேற்கண்ட சீருடைகள், காலணிகள் மற்றும் ஷூக்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், மேலும் சீருடை தையல் கூலி வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.50/– இலட்சத்திற்குள் வாங்கி வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2051/2023/எச்1

**தீர்மானம் எண்.121**
மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் – 25</u>**

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்குன் குன்யா போன்ற நோய்கைள பறப்பும் கொசுக்களை ஒழிக்கும் பணிக்கு இயங்கி வரும் வாகன கொசு புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் மற்றும் PULSE FOGGING MACHINE போன்ற இயந்திரங்களில் அவ்வப்போது பழுது ஏற்பட்டு கொசு ஒழிப்பு பணி பாதிப்படையும் சூழல் உள்ளதால் மேற்கண்ட பணியின் அத்தியாவசியம் கருதி வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சதிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2025/2023/எச்1

**தீர்மானம் எண்.122**
மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் – 26</u>**

நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் கொசு புழு ஒழிப்பு பணிக்காக 55 DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு தேவையான உபகரணங்கள் பணியில் ஈடுபடும்போது வைத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே, மேற்கண்ட பணிக்கான உபகரணங்கள் தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2044/2023/எச்1

**தீர்மானம் எண்.123**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் – 27

தமிழ்நாடு அரசு ஆணைக்கிணங்க கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்காக நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைகுப்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட முகாம்களில் பணிபுரிந்து வரும் தன்னார்வலர்களுக்கு தேவையான பந்தல், தேநீர், காலை உணவு மற்றும் மதிய உணவு பொருட்களை ஆகிய வாங்கி வழங்கிட இந்நகர்மன்ற தீர்மானம் எண்.73 நாள்: 07.08.2023ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 09.08.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. ராம் பிரதர்ஸ் 28
2. DUDS
3. ஓம் சக்தி எண்டர்பிரைசஸ்

மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் வ.எண்.1ல் உள்ள நிறுவனமான ராம் பிரதர்ஸ் 28 என்ற நிறுவனத்திடமிருந்து குறைந்த விலைப்புள்ளி வரப்பெற்றது, மேற்படி முகாம்களில் தன்னார்வலர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் உடனடியாக தேவைப்படுவதாலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் 09.08.2023ம் தேதிய முன் அனுமதியின் படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ராம் பிரதர்ஸ் 28 என்ற நிறுவனத்திற்கு ரூ.2.00/– இலட்சம் செலவினத்திற்குள் பணி மேற்கொள்ள பணி உத்தரவு அனுமதி பெற்று வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1593/2023 /H1**

**தீர்மானம் எண்.124**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண் –28

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் MAWS Dept நாள்.23.11.2016–ன் படி பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், மாணவ மாணவியர் சாப்பிடும் பகுதிகளை தூய்மைப்படுத்திடவும், கழிவுநீர் கால்வாய் தூய்மைப்படுத்தும் பணி, வாரம் ஒரு முறை ஒட்டடை அடிக்கும் பணி, கழிவறைகளை காலை மற்றும் மாலை வேலைகளை தூய்மை பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி தூய்மை பணியாளர் பற்றாக்குறை உள்ளதால் தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களின் தினக் கூலி நிர்ணயம் ரூபாய்.424 மற்றும் இதர செலவினங்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிகாட்டுதலின்படி 15 பணியாளர்களை பணியமர்த்திகொள்ள ஒப்பந்தபுள்ளி

கோரவும் அதற்கான உத்தேச செலவினம் 9.60/– இலட்சத்தை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.125**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 29</u>

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயற்படுத்த TNUIFSL நிறுவனம் மூலம் தனியர் கலந்தாலோசகர் M/s Haskoning DHV Consulting Pvt Ltd நியமிக்கப்பட்டு முதற்கட்ட ஆய்வு பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்படி பணியில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியுள்ளதால் இந்நிறுவனத்திற்கு நகராட்சி பகுதியில் கழிவு நீரேற்று கிணறு, நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கீழ்க்காணும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | அமைவிடம் | சர்வே எண் மற்றும் இடத்தின் உரிமையாளர் |
|---|---|---|
| 1 | சங்கு ஊதும் இடம் | சர்வே ண்.350/7 – 478 சதுர மீட்டர்புதிய சர்வே எண்.350/2C1 |
| 2 | மகாலஷ்மி நகர் (NPRவடக்குபுறம்) | சர்வே ண்.43/3H – 1585 சதுர மீட்டர் |
| 3 | மீனாட்சி நகர் | சர்வே எண்.174/1A1 |
| 4 | சின்னப்பா அவென்யூ | சர்வே எண்.394/7, 393/ புதிய சர்வே எண்.394/4A1 - 310 சதுர மீட்டர் பட்டா எண். 8536 394/4A3 – 400 சதுர மீட்டர் |
| 5 | S.R.அவென்யூ | சர்வே எண்.526/3B |
| 6 | நங்கூரம் நகர் | சர்வே எண்.229/2, 230,238,239, புதிய உட்பிரிவு எண்.229/105 |
| 7 | எம். கே. நகர் | சர்வே எண். 143.2B1A1 பட்டா எண்.509 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 714/2023/எப்1**

**தீர்மானம் எண்.126**
மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>பொருள் எண் – 30</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் செயல்பட்டு வருகின்றது, காமராஜபுரம் முன் மாதிரி தொடக்க பள்ளி, நெல்லிக்குப்பம் சாலை மற்றும் கூடுவாஞ்சேரி தொடக்க பள்ளிகளில் மாணவர்களுக்கு நவீன சுத்திகரிப்பு குடிநீர் வழங்க தலைமை செயலாளர் அவர்களின் அறிக்கையின் படி இரண்டு பள்ளிகளுக்கும் நவீன சுத்திகரிப்பு குடிநீர் நிலையம் அமைக்க நகராட்சி பொறியாளர் மூலம் ரூ.13.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டை பார்வையிட்டு

அங்கீகரிக்கவும், நகராட்சி பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 777/2023/இ1**

**தீர்மானம் எண்.127**
மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>பொருள் எண். 31</u>

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2023ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 31.08.2023 வியாழக்கிழமைஅன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவுக்கான உள்துறை பணிகள் செய்தல் | 17.50 | ஸ்ரீ குஹான் சிவில் கன்ஸ்டக்ஷன் | – | 0.01% | ஸ்ரீ குஹான் சிவில் கன்ஸ்டக்ஷன் |
| | | | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் | 3.43% | – | |

**அலுவலக குறிப்பு:**
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2023/இ1**
**நாள்.31.08.2023**

**தீர்மானம் எண்.128**
மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>பொருள் எண் : 32</u>

நந்திவரம் – கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2024ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 31.08.2023 வியாழக்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு தொழில்நுட்ப உதவியாளர்களை 5 நபர்கள் வெளியாட்கள் கொணர்வு (Through Out Sourcing) வாயிலாக ஒப்பந்த அடிப்படையில் மூலம் ஒரு வருடத்திற்கு காலத்திற்கு பொறியியல் பிரிவில் பணி செய்ய பொதுப்பணித்துறை விலைவிகிதப்படி (PWD Schedule of Rates 2023–2024) | 13.00 | குமரன் எலக்ட்ரிகல்ஸ் | – | 0.09% | குமரன் எலக்ட்ரிகல்ஸ் |
| | | | L.வெங்கடேசன் | 2.19% | – | |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2022/இ1**

**நாள்.31.08.2023**

**தீர்மானம் எண்.129**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.33**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியின் அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் **2023–2024** ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**9.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.130**

மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண்.34**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி பொது நிதி 2023–2023ன் கீழ் மன்ற அனுமதி பெற்று 29.08.2023 புதன்கிழமைஅன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.15 பகுதியில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் (RO Plant) ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்தல் (01.09.2023 முதல் 31.05.2024) | 20.00 | கென்ஸ் டெக்னாலஜி LLP ஆவடி சென்னை | - | 0.03% | கென்ஸ் டெக்னாலஜி LLP ஆவடி சென்னை |
| | | | அக்குவா டெக் ஆவடி, சென்னை | 2.68% | - | |
| 2. | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.15 பகுதியில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் (RO Plant) ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்தல் (01.09.2023 முதல் 31.05.2024) | 20.00 | கென்ஸ் டெக்னாலஜி LLP ஆவடி சென்னை | - | 0.03% | கென்ஸ் டெக்னாலஜி LLP ஆவடி சென்னை |
| | | | அக்குவா டெக் ஆவடி, சென்னை | 2.68% | - | |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 777/ 2023/இ1**
**நாள்.29.08.2023**

**தீர்மானம் எண்.131**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

ஓம்/M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி